**கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 50,815 பெறுமதியான 167 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நன்கொடைப் புத்தகங்களை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 47,598,405 பெறுமதியான 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பற்றிய பதிவுகள் பராமரிக்கப்பட்டு, குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றன. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) இல.371(2)(ஆ) | கடந்த காலங்களில் சபையின் திண்மக்கழிவு நிலையம் தொடர்பில் வழங்கப்பட்ட ரூபா 224,250 பெறுமதியான 05 முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகிறது. குறித்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) இல.571(1), (2) & (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 400,558 பெறுமதியான காலங்கடந்த 04 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 1,245,454 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 1,903,574 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறா ன மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,200,000 | 12,527,837 | 589,933 | 11,937,904 | 1,800,000 | 393,691 | 393,691 | 11,937,904 |
| வாடகை | 7,375,369 | 7,470,046 | 6,953,493 | 516,552 | 7,808,877 | 6,400,693 | 6,678,734 | 1,044,310 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,775,000 | 4,497,586 | 3,333,186 | 1,164,400 | 4,575,000 | 3,320,865 | 3,541,165 | 1,212,360 |
| ஏனைய வருமானம் | 5,593,000 | 3,970,441 | 3,970,441 | - | 18,380,000 | 49,545,087 | 46,043,661 | 3,501,426 |
| | 18,943,369 | 28,465,910 | 14,847,053 | 13,618,856 | 32,563,877 | 59,660,336 | 56,657,251 | 17,696,000 |

### 2..2..2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **ஆதனவரி**<br>வாழைச்சேனை காகித ஆலையிடமிடமிருந்து அறவீடு வேண்டிய 25 வருடங்களிற்கு மேற்பட்ட வீத வரி நிலுவை ரூபா 11,937,904 ஆன பழைய மீதியொன்று காணப்பட்டிருந்தது. | காகித ஆலையிடமிருந்து தொகையினை பெற்றுக்கொள்ள திணைக்கள தலைவரினூடாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். | நீண்டகால வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதி மற்றும் சபை நிதியினைப் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டில் ரூபா 10,950,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட எஸ்கவேட்டர் (Excavator) இயந்திரத்தினை எடுத்துச் செல்லக்கூடிய வகையில் பிரத்தியேக இழுவைப் பெட்டி கொள்வனவு செய்யப்படாமையினால் அதனை வாடகைக்கு வழங்கி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் நோக்கத்திற்கு முரணாக சபையின் திண்மக்கழிவு நிலைய வேலைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இவ் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு பெறப்பட்ட கடனுக்காக மீளச் செலுத்தும் | இவ்விடயம் தொடர்பாக COPA இன் பரிசீலனையில் உள்ளதோடு இவ்வாகனம் மூலம் எவ்வித வருமானங்களையும் ஈட்ட முடியவில்லை. அத்தோடு சபையின் பாதகமான நிதி நிலமையினால் கடனுக்கான மாதாந்த செலுத்துகைகளை வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதிக் கடன் தொகைகளை செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவணைக் காலம் 2022 மார்ச் மாதம் நிறைவுற்றிருந்த போதிலும் வட்டி உள்ளடங்கலாக ரூபா 5,818,962 தொகை உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டி காணப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் 2004 திசெம்பர் 08 ஆந் திகதியும் PL/7/1/8/11 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம்இ “கடைகள் அல்லது வர்த்தக நிலையங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழிகாட்டுவதற்கான அறிவுரை” இல.1.2(ஊ) இற்கு அமைய வாடகைக்கு விடப்படுகின்ற கடைகளின் வாடகைத் தொகையானது 05 வருடத்திற்கொருமுறை திருத்தியமைக்கப்பட வேண்டியிருந்தும் 10 கடைகளுக்கான வாடகைத் தொகை 2017 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைக்கு விடப்படுகின்ற கடைகளுக்கான வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு 03 வருடங்கள் என்ற ஒப்பந்த அடிப்படையில் வடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | கடைகளின் வாடகைத் தொகையினை திருத்தியமைப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற வாகனங்கள், இழுவைப் பெட்டிகள் மற்றும் பவுசர்கள் உள்ளடங்கலாக 15 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நன்கொடை வாகனங்களை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி அபிவிருத்தி உதவிக் கருத்திட்டத்தின் கீழ் சூடுபடுத்தின சேனை திண்மக்கழிவு நிலையத்தில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 730,000 செலவில் அமைக்கப்பட்ட வாகனத் திருத்தும் நிலையம் மற்றும் அதற்காக ரூபா 303,150 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 24 கருவிகள் மற்றும் உபகரணங்களினைப் பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகன திருத்த நிலையத்தினை பூரணப்படுத்த தேவையான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்களை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பூர்த்தி செய்யப்படாத வேலைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டில் சூடுபத்தின சேனை எனுமிடத்தில் திண்மக்கழிவுகளை தரம் பிரித்தல் கட்டிடம் நிர்மாணிப்பு வேலைகள் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டமையினால் அதனை நிறைவேற்ற காலம் இன்மையினால் அவை ரூபா 2,915,720 பெறுமதியான அத்திவார வேலைகள் மாத்திரம் நிறைவுற்ற நிலையில் குறித்த நிர்மாணப் பணிகள் பரஸ்பர உடன்பாட்டுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | இவ்வேலைத்திட்டத்தினை முழுமைப்படுத்த இச்சபை மேற்கொண்ட பிரயத்தனங்கள் எதுவும் பலனளிக்கவில்லை. | திண்மக்கழிவுகளை தரம் பிரித்தல் கட்டிடம் நிர்மாணிப்பு வேலைகளை பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆரம்பநிலைமட்டத்தில் 05 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 03 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4.4 மற்றும் 2004 ஒக்டோபர் 11ஆந் திகதிய 118ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம், சபையில் சேவையாற்றி மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களது கடன் நிலுவைகளான முறையே ரூபா 110,977 மற்றும் ரூபா 16,833 என்பவற்றை அறவிட்டுக் கொள்வதற்கு 02 முதல் 10 வருட காலம் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 செயல் திட்ட நடவடிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த 19 நடவடிக்கைகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலமாக ரூபா 215,550,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தும் அவற்றுக்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வழங்கப்படாமையினால் அவ் நடவடிக்கைகள் பூர்த்தியடையாமல் காணப்பட்டிருந்தன. | கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக பாதீட்டு ஒழுங்குகமுக்கமைய நிதி ஏற்பாடுகளை செய்ய முடியவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த 19 நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 03 வெதுப்பகங்கள் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேற்குறிப்படப்பட்ட சட்டப் பிரமாணங்கள் மற்றும் 2022 சனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் ''ஆ'' பிரிவின் பிரகாரம், விலங்கறுமனைக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு EPL பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்க மற்றும் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |